**செய்தி வெளியீடு எண்.896** **நாள்.22.10.2008**

# செய்திக்குறிப்பு

` வடகிழக்கு பருவ மழை தீவிரமடைந்துள்ள நிலையில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் தொடர்பான உயர்மட்டக் குழுக் கூட்டம் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று (22.10.2008) தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. அதில், கீழ்க்கண்ட அறிவுரைகள் வழங்கப்பட்டன.

❖ சென்னை மாநகராட்சி மற்றும் புறநகர் பகுதிகளில் பருவ மழையால் ஏற்படும் பாதிப்புகளை கண்காணிக்கவும், நிவாரணப் பணிகளை முடுக்கிவிடவும், 15 I.A.S. (இ.ஆ.ப.) அலுவலர்கள் கண்காணிப்பு அதிகாரிகளாக உடனடியாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

❖ பருவ மழையினால் இதுவரை ஏற்பட்டுள்ள உயிரிழப்புகளுக்கு உடனடியாக நிவாரண நிதி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. உயிரிழந்த நபர் குடும்பத்திற்க்கு தலா ஒரு லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

❖ பருவமழையால் இறக்கும் கால்நடைகளுக்கும் உடனடியாக நிவாரணத் தொகை வழங்கப்பட வேண்டுமென்றும், பசு மற்றும் எருதுகள் இறப்புக்கு ரூபாய் 10 ஆயிரமும், ஆடுகள் இறந்தால் ரூபாய் ஆயிரம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

❖ இதுவரையிலும், 398 வீடுகள் சேதமடைந்துள்ளதாக விபரம் பெறப்பட்டுள்ளது. இதில் 245 வீடுகள் முழுமையாகவும், 153 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளது. இதற்கும் நிவாரணத் தொகை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. முழுமையான சேதாரம் உள்ள வீடுகளுக்கு தலா ரூபாய் 2 ஆயிரமும், பகுதி சேதாரம் அடைந்த வீடுகளுக்கு ஆயிரம் ரூபாயும் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. சேதாரம் அடைந்த வீடுகளில் உள்ள குடும்பங்களுக்கு உடனடியாக 5 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய், வேட்டி மற்றும் சேலை வழங்கப்படவுள்ளது.

❖ சென்னை மாநகராட்சி பகுதியில் வெள்ளநீர் சூழ்ந்துள்ள மக்களுக்கு உணவு பொட்டலங்கள் தட்டுப்பாடின்றி வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. இன்றைய தினம் 12 ஆயிரம் உணவு பொட்டலங்கள் வழங்கப்படவுள்ளன. தேவையான இடங்களில் இவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லவும் அறிவுறுத்தப்பட்டது.

❖ வெள்ள நீர் சூழ்ந்துள்ள இடங்களில் சென்னை மாநகராட்சி போர்க்கால அடிப்படையில் வெள்ளநீரை மோட்டார் பம்புகள் மூலம் வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

❖ வெள்ளம் பாதிப்பு தொடர்பாக தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் விளம்பரப்படுத்தி அனைவருக்கும் தெரிவித்திட அறிவுறுத்தப்பட்டார்கள்.

❖ சென்னை நகரில் குடிநீர் மாசுபடும் இடங்களை கண்டறிந்து அங்கு லாரிகள் மூலம் குடிநீர் விநியோகிக்கவும், சென்னை குடிநீர் வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

❖ வெள்ள நீர் தேங்கியுள்ள பகுதிகளில், நீரினால் பரவக்கூடிய நோய்கள் பாதிப்பு ஏற்படாமல் இருக்க சுகாதாரத் துறை உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

❖ வாகனப் போக்குவரத்து தடையின்றி நடந்திட ஏதுவாக சாலையில் உள்ள சிறிய பள்ளங்களை, உடனுக்குடன் சரிசெய்திட நெடுஞ்சாலைத்துறை மற்றும் மாநகராட்சிக்கு அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி, மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் திரு. ஸ்ரீபதி, இஆப, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மை செயலர் திரு.அஷோக்வரதன்ஷெட்டி,இஆப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலாளர் திரு.க.தீனபந்து, இஆப, வருவாய்த்துறை முதன்மை செயலாளர் திரு.அம்புஜ்சர்மா, இஆப, வருவாய் நிர்வாக சிறப்பு ஆணையர் திரு.சக்திகந்ததாஸ், இஆப., பொதுப்பணித்துறை செயலாளர் திரு.ஆதிசேஷய்யா, இஆப, நெடுஞ்சாலைத்துறை செயலாளர் திரு. அலாவூதீன், இஆப, சுகாதாரத்துறை செயலாளர் திரு.வி.கே.சுப்புராஜ், இ.ஆ.ப., பொதுத்துறை செயலாளர் திரு.ஜோதி ஜெகராஜன், இஆப, நகராட்சி நிர்வாக ஆணையர், பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் ஆகியோர் பங்கேற்றனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.